1967 ஜூலை 12]

வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கைத்தறி நெசவைப் பொறுத்த வரையில் கஷ்டங்கள் வருவதும் தீர்க்கப்படுவதும் மீண்டும் வருவதும் தீர்க்கப்படுவதுமாகத்தான் இருந்து வருகிறது. ஆகவே அரசாங் கத்தின் வசதிகளுக்குட்பட்ட நிலையில் அந்தத் தொழிலுக்கு என்ன என்ன பாதுகாப்பு அளிக்கலாமோ அப்படிப்பட்ட பாதுகாப்பை அரசாங் கம் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், கனம் அமைச்சர் அவர்கள் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கு முயற்சிகள் செய்வதாகக் கூறினார்கள். சென்ற ஆண்டு கைத்தறி நெச வுத் தொழில் அமைச்சராக இருந்த திருவாளர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கூறினார்கள், அமெரிக்காவுக்குச் சென்று விட்டு வந்து கைத்தறி சம்பந்தமாக எந்தவிதமான விளம்பரமும் அங்கே கிடையாது; ஆகவே தான் விற்பனையாகவில்லை என்று. அங்கே குறிப்பாக வண்ணம்மாறும் துணிகளுக்குப் போதுமான அளவுக்கு விளம்பரம் செய்வதற்கு அர சாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விளம் பரம் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப் பொழுதேகூட இதைப்பற்றிய விளம்பரங்கள் அமெரிக்கப் பத்திரிகையிலே வந்திருக்கின்றன. 6 கோடி ரூபாய் வரையில் ஏற்றுமதி செய்து கொண்டு வந்த இந்த ஏற்றுமதி 10 லட்சம் ரூபாய் அளவிற்கு இறங்கி வந்ததற்குக் காரணம் விளம்பரம் செய்யாமல் இல்லை, அங்கே பேஷன் மாறிவிட்டது. ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து இதே மாதிரி துணிகள் வந்துவிட்டன. அமெரிக்காவிலும் இதுபோன்ற துணிகள் உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இதுதான் காரணம். ஆப்ரிக்காவில் கைக்குட்டை போன்ற கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. அங்கே இவற்றை ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : கைத்தறி பைனான்ஸ் கார்ப்பரேஷன் தனிப் பட்ட நபர்களுக்கு எந்த அடிப்படையில் கடன் கொடுக்கிறது ? எத்தனை பேர்களுக்கு இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிப்பட்ட நபர்களுக்கு அவர்களுடைய சொந்த செக்யூரிட்டியின்மேல் உத்திரவாதத்தின் மேல் கடன் அளிக்கப்படுகிறது. 1965-ஆம் ஆண்டில் 650 பேர்களுக்கு 25,75,550 ரூபாயும் 1966-ம் ஆண்டில் 1,378 பேர் களுக்கு 78,80,300 ரூபாயும், 1967-ஆம் ஆண்டில் 10—5—67 வரையில் 468 பேர்களுக்கு 28,20,775 ரூபாயும் தரப்பட்டிருக்கிறது.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது அமெரிக்காவிலே கைத்தறி வாங்கு வது குறைந்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அமெரிக்காவிலே கைத்தறித் துணியை இங்கிருந்து ஏற்றுமதி செய்யும் பொழுது டிவேல்யுவேஷன் செய்ததற்குப் பிறகு முன்னைக்காட்டிலும் மலிவாக அனுப்ப வேண்டுமென்று சொல்லப்படுகிற விஷயம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கலாம்.

Metal ores

***275 *Q.*—Thiru K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether it is a fact that the Madras Government is contemplating to explore and establish the occurrence of both ferrous and non-ferrous (notably zinc, lead and copper) metals in the area comprising

portions of Salem, North Arcot and South Arcot districts with the aid of United Nations Organizations.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். நிறைவேற்றக் கருதியுள்ள கனி வள வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய கூறுகள் அடங்கிய குறிப்பு ஒன்று சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம் : இந்த ஐக்கியநாடுகள் மேம்பாடு வேலை திட்டத்தின் கீழ் குறிப்பாக நம் மாநிலத்தில் மூன்று மாவட்டங்கள்தான், சேலம், நார்த் ஆற்காடு, சவுத் ஆற்காடு போன்ற மாவட்டங்களில்தான் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அங்குதான் கனிப்பொருள்கள் கிடைக்கிறது என்பது நம் அரசாங்கத்தின் எண்ணமா? அதைத் தொடர்ந்து இருக்கிற செங்கல்பட்டு ஜில்லாவிலும் குறிப்பாகத் திருத்தணி தாலூகாவில் அதிகமாக கனிப்பொருள்கள் இருப்பதாக முன்பு ஆராய்ச்சி செய்து முடிவுக்கு வந்திருக்கிறது. அதையும் இதில் சேர்த்துக் கொள்ள உத்திரவிடுவார்களா? யுனைட்டெட் நேஷன்ஸ் ஸ்பெஷல் பண்டுக்கு இதையும் சிபாரிசு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அயக்கலப்புள்ள உலோகப் படிவங்கள், அயக்கலப்பற்ற உலோகப் படிவங்கள் இவை எங்கெங்கு கிடைக்கும் என்று ஏற்கனவே இந்த மாநிலத்தில் ஆராய்ச்சி செய்ததன் காரணமாக அந்த மாவட்டங்களில் கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கிறது என்று தென்படுகிறது. ஆகவே அந்த மாவட்டங்களில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது அமெரிக்க உதவியோடு செய்யப்படுகிற ஆராய்ச்சி. அது தக்க பலன் அளித்து அதை மேலும் விரிவு படுத்துகிற எண்ணம் வரும்போது வேறு மாவட்டங்களில் எங்கெங்கு இருக்கிறது என்று கண்டறிந்து அந்த மாவட்டங்களிலும் மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

சிறுதொழில் பிரிவுகள்

* 276 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறு தொழிலபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இது வரை உதவித் தொகை தந்து வளர்க்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை என்ன?

(இ) இந்த தொழிற்சாலைகளுக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ள உதவித் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1922-ம் ஆண்டு அரசாங்க நிதி உதவிச் சட்டத்தின் கீழ் தொழில்களுக்கு உதவி வழங்குவதைத்தான் உறுப்பினர் குறிப்பிடுகிறார் எனக் கருதுகிறேன். ஏப்ரல் 1948-லிருந்து மார்ச் 1967 வரை 34,100 சிறு தொழில் பிரிவுகள் 4,14,14,931.25 ரூபாய் வரை கடன் வகையில் நிதி உதவி பெற்றன. இதே காலத்தில் இச் சட்டத்தின்கீழ் இரண்டு சிறு தொழில் பிரிவுகள் உதவித் தொகை வகையில் 755 ரூபாய் வரை நிதி உதவி பெற்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இதுமாதிரியான தொழிற்சாலைகள் அமைக்க இப்போதுள்ள அரசாங்கம் புதுத் திட்டம் ஏதாவது வகுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறு தொழில்களுக்கு உதவி செய்கிற வகையில்தான் ரூபாய் 4,14,14,931·25 34,100 சிறு தொழில்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அதிகமாக ஒரு லட்சம் ரூபாய் வரை கடன் உதவி செய்யலாம் என்றிருந்தது. இப்போது இரண்டு லட்சம் ரூபாய் அளவிற்குக் கடன் உதவி செய்வதற்குள்ள முயற்சியை இந்த அரசு மேற்கொண்டு இரண்டு லட்சம் என்ற இலக்கை வைத்திருக்கிறது.

87–91-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.